RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1419

OPEN ACCESS

# பாலின அடிப்படையில் பெண்ணியச் சிக்கல்கள்

**நா. கலைவாணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638107, தமிழ்நாடு, இந்தியா.

# A Study of Feminist issues based on Gender

**N. Kalaivani** [a, *]

[a] Department of Tamil, Kongu Arts and Science College (Autonomous), Erode-638107, Tamil Nadu, India

* Corresponding Author:
kalairaj.nr@gmail.com

Received: 16-11-2021
Revised: 08-09-2022
Accepted: 17-09-2022
Published: 29-11-2022

Check for updates

**ABSTRACT**

Feminist ideas have evolved into contemporary literary traditions and critical theories. During this period, collections of ideas about feminism emerged within all frameworks of sociology, politics, economics, and literature. It is necessary to record the problems faced by women based on their gender. The texts that have been chosen for this article are Sundara Pandian's Aththi, Solai Sundaraperumal's Nanjai Manidhargal, Prapanchan's Kagidha Manidhargal, Rajam Krishna's Lines and Circles, and Imayan's Arumugam. This study aims to examine the oppression of women.

**Keywords:** Rajam Krishnan, Gender Equality, politics, Imayan

## முன்னுரை

பெண்ணியச் சிந்தனைகள் சமகால இலக்கிய மரபுகள் ஆகவும் திறனாய்வுக் கோட்பாடுகள் ஆகவும் விரிந்து பரவி பல பரிணாமங்களைக் கொண்டுள்ளன. இக்காலகட்டத்தில் சமூகவியல், அரசியல், பொருளாதாரம், இலக்கியம் என்ற எல்லா கட்டமைப்பிற்குள்ளும் பெண்ணியம் பற்றிய கருத்துத் தொகுப்புகளை, பெண் பாலின அடிப்படையில் சந்திக்கும் சிக்கல்களைப் பதிவு செய்ய வேண்டியது மிகவும் அவசியமான ஆய்வறிதல் முறையாகும். அந்த வகையில் சுந்தர பாண்டியனின் அந்தி, சோலை சுந்தரபெருமாளின் நஞ்சை மனிதர்கள், பிரபஞ்சனின் காகித மனிதர்கள், ராஜம் கிருஷ்ணனின் கோடுகளும் கோலங்களும் மற்றும் இமையத்தின் ஆறுமுகம் ஆகிய ஐந்து புதினங்களும் இவ்வாய்வில் முதன்மை நூல்களாக எடுத்தாளப்பட்டு அவைகளில் இடம்பெற்றுள்ள பெண் அடக்குமுறை குறித்த தளங்களை ஆராயும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## பெண் - வார்ப்பும் வளர்ப்பும்

ஒரு பெண் பிறந்தது முதல் அவள் வளர்கின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்ணென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று போதிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறாள். பருவமடைந்த பெண்ணை ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கும் வரை வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருப்பதாக சில பெற்றோர் கருதுகிறார்கள். பெண் சிறிது நேரம் கழித்து வந்தால் குடும்ப உறுப்பினர்களின் சந்தேகக் கணைகளுக்கு ஆளாகிறாள். ஆனால் ஓர் ஆண் மகன் வீட்டிற்கு நேரம் கழித்து வந்தால் ‘அவன் ஆண்பிள்ளை எப்படி வேண்டுமானாலும் இருப்பான்’ என்று ஆணின் செயலுக்கு நியாயம் கற்பிக்கின்ற நிலை காணப்படுகிறது.

படைப்பில் ஆணிற்கு இணையாகவும் துணையாகவும் விளங்குபவள் பெண். மனிதத்திற்கு அப்பாற்பட்ட பிறவியாகப் பெண் கருதப்படாமல் ஒரு பகுதியாக வைத்து போற்றப்படுகிறாள். பால் ரீதியான பிறப்பை சமுதாயம் பாலின ரீதியான வேறுபாடாக்கி நிலைநிறுத்திப் பார்க்கும் சூழல் நிலவுகிறது. உடற்கூறு அடிப்படையிலான வேறுபாடுகள், சூழ்நிலையின் காரணமாக திணிக்கப்படும் பாலின வேறுபாடுகள் ஆகிய இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலை சமுதாயத்தில் உள்ளது. பெண்கள் பாதுகாப்பிற்கு உட்பட வேண்டியவர்கள் என்றும் பெண்கள் சார்பு நிலைக்கு உரியவர்கள் என்றும் முத்திரை குத்தப்பட்டு காலங்காலமாக நடத்தப்பட்டு வருகிறார்கள்.

பெண்ணை ஒரு சடப் பொருளாகக் கருதும் போக்கு இன்னும் மறையவில்லை. ஓர் ஆணின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு நுகர்பொருளாகத் தன்னை அர்ப்பணிப்பது பிறப்பின் லட்சியம் என்று கருதுகின்ற நிலை இன்றும் சில பெண்களிடையே காணப்படுகிறது இக்கருத்தின் ஆணிவேர்களும் சல்லி வேர்களும் இன்று ஆழமாக வேரூன்றி உள்ளன. இன்று அவை பாலியல் சார்ந்த அடக்குமுறையாக, கொடுமைகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

வேறுபட்ட பாகுபாடுகளையும் நிராகரிப்புகளையும் சமூக மதிப்புகளையும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் பெண்கள் இருந்து வருகின்றார்கள். இத்தகைய நிலை குடும்பங்களில் மட்டுமின்றி வேலை செய்கின்ற இடங்களிலும் தொடர்ந்து காணப்படுகிறது. காலங்காலமாக பெண்களுக்கு மட்டுமே கற்பு என்ற மதிப்பு வலியுறுத்தப்படுகிறது.

இதுகுறித்து ஆ.கருணாநிதி கூறும்பொழுது "இன்றைய பொருளாதார முன்னேற்றத்தில் பல்வேறு இடங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பெண்கள் போய் வரும்போதும் வேலை பார்க்கும் போதும் புறத்தோற்றத்தில் சமுதாய மாற்றங்கள் காணக் கிடைக்கின்றன என்றாலும் பல்வேறு நிலைகளில் ஒடுக்குமுறையும் துன்பமும் தொடர்கதைதான்" என்று கூறியுள்ளார் (Karunanidhi, 2002).

பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராகக் கால் பதித்தாலும் பெண்ணென்றால் கேவலம் போகப் பொருள் தானே என்று நினைக்கின்ற போக்கு தொடர்கதையாகவே உள்ளது. இந்த அடக்குமுறை கிராமம் என்று இல்லாமல் நகரங்களிலும் புரையோடிக் கிடப்பதை படைப்பாசிரியர்கள் தங்கள் புதினங்களில் சுட்டிக்காட்டியுள்ளமையை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## கிராமங்களில் காணலாகும் பாலின அடிப்படையிலான அடக்குமுறைகள்

ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக திருமண பந்தத்திற்குள் நுழைந்தவுடன் மனைவியாக வந்தவள் தனது விருப்பு வெறுப்புகளை ஒதுக்கிவிட்டுக் கணவனின் விருப்பப்படி நடக்க வேண்டுமென்று நினைக்கின்ற ஆண்கள் உண்டு என்பதை 'நஞ்சை மனிதர்கள்', 'கோடுகளும் கோலங்களும்' என்று புதினங்கள் சுட்டிக்காட்டுகின்றன. நஞ்சை மனிதர்கள் என்ற புதினம் மூன்று தலைமுறைகளின் வாழ்க்கையினைக் கூறுகிறது. இப்புதினத்தில் வரும் சோமுப் பிள்ளை தன் பண்ணையத்தில் வேலை செய்யும் பெரியகுப்பான் என்பவன் சாணி அள்ளிக் கொட்டுவதை பார்த்து "என்னடா பொட்டச்சிங்க செய்யற வேலைய தடிப்பய நீ செய்யலாமாடா?" என்று கூறி அவனைப் போட்டு அடிப்பதாக இடம்பெற்றுள்ளது (Solai Sundaraperumal, 1998). பெண்களுக்கு என்று சில வேலைகளை ஒதுக்கி வைத்துப் பாகுபாடு காட்டும் இச்சமுதாயம் அதை ஆண்கள் விருப்பத்துடன் செய்ய முன்வந்தால் வளையலை மாட்டிக்க, புடவையைக் கட்டிக்க என்று அவர்களை பழித்துப் பேசுவதை நடைமுறை வாழ்க்கையில் காணமுடிகிறது.

ஒரு பெண்ணால் ஆணின் துணையின்றி வாழமுடியாது என்று ஆண்கள் நினைப்பது தவறாகும் என்பதனை ராஜம் கிருஷ்ணனின் 'கோடுகளும் கோலங்களும்' என்ற புதினம் வெளிப்படுத்துகின்றது. எந்த ஒரு செயலையும் முயற்சியுடனும் ஈடுபாட்டுடனும் செய்யும்பொழுது பெண்ணால் முடியாதது ஒன்றுமே இல்லை என்பதை இப்புதினத்தில் வரும் 'செவ்வந்தி' பாத்திரம் விளக்குவதாக அமைந்துள்ளது. கிராமங்களும் நகரங்களாக மாறிவரும் இச்சூழலில் அறிவியல் முன்னேற்றங்களை விவசாய மேம்பாட்டில் புகுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற பாத்திரப் படைப்பாக செவ்வந்தி என்ற பாத்திரம் அமைந்துள்ளது.

நிலத்தில் உழுவதைத் தவிர எருச் சுமந்து கொட்டுதல், விதை விதைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் என்ற வகையில் பெண்களின் உழைப்பு முதன்மையாக அமைகிறது ஆனால் பெண் என்ற பால் வேறுபாடு காரணமாகப் பெண்களுக்கு முடிவெடுக்கும் உரிமையோ, நிலத்தில் உரிமை கொண்டாடும் நிலையோ இல்லை என்பதையும் இப்புதினம் சுட்டுகிறது.

இந்நிலை குறித்து ஜெகாதா கூறும்பொழுது, "பெண் என்கிற பால் பாகுபாட்டை ஒதுக்கிவிட்டுப் பொதுவான மனிதத்துவ உணர்ச்சியின் அடிப்படையில் பழக கற்றுக் கொள்கிற வரையில் பெண்ணினம் கடைத்தேறுவதற்கு வழியில்லை என்று தான் தோன்றுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார் (Jegatha, 2001).

சுந்தர பாண்டியனின் 'அந்தி' புதினத்தில் வரும் ஆறுமுகத்தம்மாள் தன் மகன்கள் கூட்டுக்குடும்பமாக வாழ வேண்டும் என்று விரும்புகிறாள் தன் சொற்படி தான் எல்லாமே நடக்க வேண்டுமென்று விரும்பும் ஆறுமுகத்தம்மாள் தன் மகள் பார்வதி ஊரில் கூத்து நடத்தும் ராமராவ் என்பவனோடு ஓடிப்போக இருப்பதைத் தெரிந்துகொண்டு கூறும்பொழுது, "ஆமா எண்ணி எட்டே நாளைக்குள்ள சட்டுப்புட்டுன்னு முடிக்கணும் பாருங்க உள்ளூர்ல கட்டையோ நெட்டையோ தள்ளி விட்டுவிட வேண்டியதுதான் உள்ளூர்ல தோதா யார் இருக்கிறா?" என்று கூறுகிறாள் (Sundarapandian, 1998).

பிள்ளைகளின் காதலைப் பெற்றோர் மறுக்கின்ற நிலையைப் புதினங்களும் வெளிப்படுத்துகின்றன. ஓர் ஆட்டைப் பலி கொடுப்பது என்றால் கூட அதன் மேல் நீர் தெளித்து, அது உடலைச் சிலிர்த்த பிறகே பலி கொடுப்பார்கள். ஆனால் திருமணம் என்ற பெயரில் பலிகடாவாக ஆக்கப்படும் பெண்கள் வாழ்க்கையில் எவ்விதமான விருப்பமும் இல்லாமல் வாழ்கின்ற நிலை காணப்படுகிறது.

கிராமங்களில் வாழும் கீழ்சாதி பெண்கள் பெண்ணென்ற காரணத்தால் அதிக அளவில் சிக்கல்களைச் சந்திக்கின்றார்கள். கூலி வேலைக்குச் செல்லும் பெண்களது உடல் உழைப்பு அவர்களது வேலைத்தளத்தில் பொருட்படுத்தப்படுவதில்லை. பால் இன அடிப்படையிலேயே அவர்களது கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. கீழ்சாதிப் பெண்கள் மேல் சாதியினரின் ஆசைக்கு அடிபணிய வேண்டி இருப்பதோடு, தங்கள் சாதியைச் சேர்ந்த ஆண்களின் விருப்பத்திற்கும் அடிபணிய வேண்டிய சூழலில் வாழ்வதைப் புதினங்கள் வெளிப்படுத்துகின்றன.

## நகரத்தில் காணலாகும் பாலின அடக்குமுறைகள்

படித்து நல்ல வேலையில் இருக்கும் பெண்களும் ஆண்களின் அடக்குமுறைக்கு உள்ளாகிறார்கள். ஆண் என்கிற தன்முனைப்பு எந்த ஆணிடம் இருக்கிறதோ அவன் தன்னை உயர்ந்தவனாகக் காட்டிக்கொள்ளவே ஆசைப்படுகிறான். ஒரு பெண் உயர் பதவியில் இருந்தாலும் வீட்டிற்கு வந்துவிட்டால் கணவனுக்கு அடங்கியவளாகக் கணவனது பேச்சுக்கு மறுபேச்சு பேசாதவளாக இருக்க வேண்டும் என்று ஆதிக்கப் போக்குள்ள ஆண்களில் சிலர் நினைக்கிறார்கள். இத்தகைய ஆண் பெண் பேதம் குடும்பத்திற்குள் நுழையும் பொழுது அங்கு புதிது புதிதாக பிரச்சினைகள் முளைக்கின்றன.

இதுகுறித்து பெண்ணிய கலைச்சொல் விளக்க கையேடு என்ற நூலில், "பெண்ணியல்பு என்பது பெண்ணின் மீது ஏற்றி கூறும் பண்புகள் முழுக்க முழுக்கச் செயற்கையானவை. ஆண் பெண் உறவு நிலையில் செயற்கைப் பண்புகளைப் பெண்ணின் மீது திணித்து அவளை அடக்கியாள ஆண் மேலாதிக்கம் எண்ணுகிறது. ஆணாயினும் பெண்ணாயினும் பால் வேறுபாடின்றித் தத்தம் தனித்திறனுடன் செயலாற்ற வழிவகுக்க வேண்டும்" என்று இடம் பெற்று இருப்பது நோக்கத்தக்கதாகும் (Kamali, 2000).

பிரபஞ்சனின் 'காகித மனிதர்கள்' என்ற புதினத்தில் வரும் அழகேசன் பேராசிரியராக இருந்தாலும் தன்னிடம் ஆய்வு மாணவிகளாக வரும் பெண்களிடம் பாலியல் நோக்குடன் நடப்பவராக இருப்பதைப் புதினம் சுட்டுகிறது. அழகேசனின் மனைவி சேதம்பாளுக்குத் தன் கணவனின் தவறான நடவடிக்கை முழுவதும் தெரிந்திருந்தும் எதையும் வெளிக்காட்டாமல் வாழ்வதை கூறும்பொழுது, "சேதாம்பாளும் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் வாங்கியவள் தான் எனினும் அவள் ஒரு பெண்.

கேவலம் ஒரு பெண் ஆண்களுக்குச் சமமாக கருத்துச் சொல்வதாவது அதுவும் புருஷன் கருத்தை மறுப்பதாவது" என்ற கூற்று பெண்களின் நிலையைத் தெளிவுபடுத்துகிறது. பெண்கள் தங்களைப் பலவீனமான பிறவியாகக் காட்டிக் கொள்வதைப் புதினமும் வெளிப்படுத்துகின்றது (Prapanchan, 1995).

"பாலியலைப் பற்றிப் பேசுவது குற்றம் என்ற நிலை தமிழ்ச் சமுதாயத்தில் இருப்பதால் பாலியல் சிக்கல் ஒரு சமுதாயச் சிக்கல் என்று எண்ணிப் பார்க்கப்படவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார் (Sivakannan, 1990).

காகித மனிதர்கள் புதினத்தில் வரும் மணிமேகலை தன்னிடம் பேராசிரியர் தவறாக நடக்க முற்பட்டதைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வரை கொண்டு செல்கின்றாள், அதுமட்டுமல்லாமல் நீதி வேண்டி மாணவர்களோடு போராட்டம் நடத்தியதாகவும் புதினத்தில் இடம் பெற்றுள்ளது பாலியல் கொடுமைகள் ஆங்காங்கே நிகழ்ந்தாலும் அதை மூடி மறைக்காமல் வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் போக்குகள், மாற்றங்கள் பெண்களிடத்தில் ஏற்பட்டு வருவதையும் இப்புதினம் சுட்டுகிறது.

படைப்பாசிரியர் இமையத்தின் 'ஆறுமுகம்' என்ற புதினத்தில் வரும் தனபாக்கியம் கணவனை இழந்த நிலையில் வேலை வேண்டி ஒரு தொழிற்சாலைக்குச் செல்ல அங்கிருந்த முதலாளியால் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறாள். இக்காட்சியைக் காணும் அவளது மகன் ஆறுமுகம் தாயை வெறுத்து வீட்டைவிட்டு வெளியேறுகிறான். பல இடங்களில் சுற்றித்திரியும் ஆறுமுகம் செக்குமேடு என்ற விபச்சாரப் பகுதியில் தன்னுடன் படித்த வசந்தா என்ற பெண்ணைச் சந்திக்கின்றான். யாருமற்ற அனாதையாக நின்ற பொழுது ஆறுதல் சொல்ல வந்தவர்களும் தன்னை அடைவதிலேயே குறியாக இருந்தார்கள் என்று வசந்தா ஆறுமுகத்திடம் கூறி வருந்துகிறாள். அட்டைக் கம்பெனியில் வேலை செய்த வசந்தா தனக்கு கூலி உயர்வு கிடைக்காததை ஆறுமுகத்திடம் கூறுகிறாள். அவனோ வேறு அட்டைக் கம்பெனியில் சேர்த்து விடுவதாகக் கூற அதற்கு வசந்தாவோ "பொம்பளைன்னா எங்கேயும் இப்படித்தான்" என்று கூறுகிறாள். வேலை செய்து தகுந்த கூலியைப் பெறுவதற்கு பெண்கள் பாலியல் தொடர்பான கொடுமைகளைச் சந்திக்க வேண்டியுள்ளதை இப்புதினம் சுட்டுகிறது (Imayam, 1999).

குறிப்பிட்ட வயதிற்குப் பிறகுதான் பெண் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறாள் என்பதை மறுக்கும் விதமாகச் சிறுமிகளும் இக்கொடுமைக்கு இலக்காவதை அன்றாடச் செய்திகள் தெரிவிக்கின்றன. தெருவில் விளையாடிக் கொண்டிருந்த நான்கு வயதுச் சிறுமியை அக்குழந்தைக்கு என்ன நடக்கிறது என்பதே தெரியாத நிலையில் பாலியல் வன்புணர்ச்சியால் அக்குழந்தை இறந்த செய்தி நாளிதழ்களில் வெளியானது. சமுதாயம் எங்கே போகிறது என்ற கேள்விக்குறி ஒவ்வொருவர் மனதிலும் ஓலமாக இன்றளவும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது (Rajam Krishnan, 1998).

இத்தகைய பாலியல் கொடுமை குறித்து சுடர் தனது 'பாலியலும் வன்முறையும்' என்ற நூலில், "பெண் என்று அடையாளப்படுத்தப்படுகின்ற மனித உடல் ஒரு போகப் பொருள் என்ற சீக்குப் பிடித்த எண்ணம் ஆண்களில் அதிக விழுக்காட்டினரைப் பற்றியிருக்கிறது. இதில் படித்தவன், பாமரன், ஏழை பணக்காரன், உத்தியோகத்தில் இருப்பவன், ஊர்சுற்றி, கிழவன், குமரன், மணமாகாதவன், உயர்ந்த சாதிக்காரன், தாழ்ந்த சாதிக்காரன் என்ற வேறுபாடு எல்லாம் கிடையாது". என்று கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும் (Sudar, 2001).

கற்பு என்ற மதிப்பு காலங்காலமாக பெண்மேல் சுமத்தப்பட்டு இருப்பதால் பெண் வீட்டிற்கு வெளியேயும் வீட்டிற்குள்ளும் அதிகமாகப் பிரச்சினைகளைச் சந்திக்கின்றாள். வழிவழியாகப் பின்பற்றப்படும் சடங்குகள், பழக்கவழக்கங்கள் மாற வேண்டும் என்பதை ஜோதிர்லதா கிரிஜா 'அவர்கள் கிடக்கிறார்கள்' என்ற புதினத்தில் தேவகி என்ற பாத்திரப் படைப்பின் கூற்றாக, "பரம்பரைப் பழக்கவழக்கங்களுக்கு எல்லாம் மரியாதை குடுக்கணும் தான் எப்போ? அதுகள் நியாயமாய் இருக்கிறவரைக்கும். அந்த பழக்கவழக்கங்கள் பிரயோசனம் இல்லாத சம்பிரதாயங்களாய்ப் போகும்போது அதுகளை விட்டுடணும். அதுதான் புத்திசாலித்தனம். காலம் மாறும்போது சம்பிரதாயங்கள் மாறியே தீரணும்" என்று குறிப்பிட்டுள்ளார் (Sethumani Maniyan, 1990).

## முடிவுரை

ஆய்விற்கு எடுத்துக்கொண்ட ஐந்து புதினங்களும் பாலின அடிப்படையில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளை மையப்படுத்திக் காட்டுகின்றன. பால் வேறுபாடு பார்க்கும் நிலைமாறி பெண்ணாக இருந்தாலும் ஆணாக இருந்தாலும் அவர்கள் சரிசமமாக நடத்தப்பட வேண்டும். குறுகிய வட்டத்திற்குள் இருக்கும் பெண் குறித்த சிந்தனைப் போக்குகள் மாற்றம் பெற்று மனம் விசாலப்பட வேண்டும் இத்தகைய நிலை உருவாக வேண்டுமெனில் கடைப்பிடிக்கப்படும் சில மூடநம்பிக்கைகளும் சடங்குகளும் மாற்றம் பெறும் சூழல் உருவாக வேண்டும் என்ற கருத்தை இந்த ஆய்வுக் கட்டுரை முன்வைக்கிறது.

## References


Imayam, (1999) Arumugam, Kriya Pathippagam, Chennai, India.

Jegatha, (2001) Pengalum Pathukappu Sattangalum, Sri Senba Pathippagam, Chennai, India.

Kamali, T. (2000) Penniya Kalaisol Vilakka Kaiyedu, Mother Teresa Women's University, Kodaikanal, India.

Karunanidhi, M. (2002) Samuthaiya Sikkalkal, Rockfort Publications, Chennai, India.

Prapanchan, (1995) Kakitha Marangkal, Thagam Pathippagam, Chennai, India.

Rajam Krishnan, (1998) Kodukalum Kolangalum, Thagam Pathippagam, Chennai, India.

Sethumani Maniyan, (1990) Tamil Novelkalli Pathippukal, Senbagam Veeliyeedu, Madurai, India.

Sivakannan, M.V. (1994) Mu. Va. Vin Novelkalli, samuthaiya sikkal, Madura Pathippagam, Chennai, India.

Solai Sundaraperumal, (1998) Nanjai Manitharkal, Kavya Pathippagam, Chennai, India.

Sudar, (2001) Paliyalum Vanmuraium, Sornnam Pathippagam, Chennai, India.

Sundarapandian, (1998) Andhi, Kirya Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License